பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 14 செவ்வாய்க்கிழமை 30.08.2022 கதிர் 186

## இடைக்கால பட்ஜெட் ரணில் சமர்ப்பித்தார்

இந்த ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நிதியமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிற்பகல் 01.00 மணிக்கு வரவு செலவுத் திட்ட உரையை ஆற்றினார். 02 மணி வரை அது தொடர்ந்தது. அதனையடுத்து நாளை 31 ஆம் திகதி காலை 09.30 மணி வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. திருத்தப்பட்ட ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் நாளை முதல் எதிர்வரும் 02 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

### வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்காக நீதி வேண்டி

# 2,000 ஆவது நாளில் கவனவீர்ப்பு: உலகம் இன்னும் கவனிக்கவில்லை

### சர்வதேச விசாரணை கோரி பொதுமக்கள் புதுக்குடியிருப்பு நகரில் இன்று திரண்டனர்




(சண்முகம் தவசீலன்)

புதுக்குடியிருப்பு,ஒகஸ்ட்30

தமிழ் மண்ணில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்காக நீதி வேண்டி, சர்வதேச விசாரணை கோரி, சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று புதுக்குடியிருப்பு நகரில் மாபெரும் கவன வீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.





3

## யாழிலும் போராட்டங்கள்



சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது தினம் இன்றாகும். இந்த தினத்தினை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் மற்றும்

2

## வடக்கை வேட்டையாடி விட்டு தெற்கையும் வதைக்கின்றது பயங்கரவாத தடைச்சட்டம்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடுமையை இன்றளவிலும் தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றனர். இன்று அச்சட்டம் ஜனநாயகத்திற்காகக் குரல் கொடுக்கும் நாட்டின் இதர பகுதியினரையும் விட்டு வைக்கவில்லை. எனவே நாட்டை முன்னேற்ற விரும்பினால் கடந்த கால தவறுகளை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு அதை நிவர்த்தி செய்ய தென்னிலங்கை அரசியல்வாதிகள் முன்வரவேண்டும்.

2



2

## பாழடைந்த வீட்டில் பரவசம் யாழில் இரு பெண்கள் கைது

யாழ்ப்பாணத்தில் பாழடைந்த வீடொன்றுக்குள், போதைப் பொருளை நுகர்ந்து கொண்டிருந்த இரு பெண்கள் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து இரண்டு கிராம் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

2

### மகசின் சிறைச்சாலையிலுள்ள

## முன்னாள் போராளி உள்ளிட்ட 2 கைதிகள் பரீட்சையில் சித்தி

இம்முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய இரண்டு கைதிகள்சித்தியடைந்துள்ளனர்.

இந்த வருடம் மகசின் சிறைச்சாலையிலிருந்து மூன்று கைதிகள் ஜி.சீ.ஈ.

2

## அரசியல் தீர்வில் எதிரணி உறுதி

### ராஜித எம்.பி. கருத்து



தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு அடங்கிய புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் உள்ளிட்ட விடயங்களில் எதிரணியினராகிய நாம் உறுதியாக இருக்கின்றோம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

2

## கோதுமை மா விலை அதிகரிப்பால் 3 ஆயிரம் பேக்கரிகளுக்கு மூடுவிழா

நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சந்தையில் தற்போது ஒரு கிலோகிராம்

2

## ஐ.நா. மாநாட்டில் இலங்கை குறித்து வெளிவிவகார அமைச்சர் அறிக்கை

### நீதி அமைச்சரும் ஜெனிவா பயணம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான கலந்துரையாடலின்போது வெளிவிவகார அமைச் சர் அலி சப்ரி அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51 ஆவது அமர்வு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 12ஆம் திகதி முதல்

2

## அரசியல் தீர்வில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும், அந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் காலிமுகத்திடல் செயற்பாட்டாளர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும், தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு அடங்கிய புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் உள்ளிட்ட விடயங்களில் எதிரணியினராகிய நாம் உறுதியாக இருக்கின்றோம்.

இந்த விடயங்கள் நிறைவேற்றப்பட்டால் பொருளாதார நெருக்கடியும் நீங்கும். ஏனெனில் இந்த விடயங்களில் வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புகளும் உறுதியாக உள்ளன. அவை நிறைவேறியவுடன் சர்வதேச சமூகம் தாமாகவே முன்வந்து எமது நாட்டுக்கு உதவி வழங்கும். புலம்பெயர் தமிழ் மக்களும் எந்தவித அச்சமும் இன்றி நாட்டுக்கு வந்து முதலீடுகளை வழங்கி உதவி செய்வார்கள்.

ஆனால், மேற்படி விடயங்களை நிறைவேற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பகத்தன்மையுடன் செயற்படுவார் என்பது கேள்விக்குறி. ராஜபக்ஷக்களின் - 'மொட்டு'க் கட்சியினரின் செல்லப்பிள்ளையான ரணில் விக்கிரமசிங்க, அவர்களின் சொற்படியே நடக்கின்றார்.

அதனால்தான் ஜனாதிபதியை நாம் எதிர்க்கின்றோம் - என்றார்.

## ஐ.நா. மாநாட்டில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டோபர் 7ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை தொடர்பில் எதிர்வரும் செப்டம்பர் 12ஆம் திகதி கலந்துரையாடலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான இலங்கை தூதுக்குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்கவுள்ளதோடு அன்றைய தினம் சபையில் அறிக்கை ஒன்றையும் முன்வைக்கவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் இந்தத் தூதுக்குழுவில் இணைந்துகொள்ளவுள்ளார்.

## மகசின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்தரப் பரீட்சையில் தோற்றினர் என்று சிறைச்சாலையின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்துள்ளார்

பல்வேறு குற்றச்சாட்டின் பேரில் சிறைக்கு அனுப்பப்படும் கைதிகளுக்குப் புனர்வாழ்வு அளித்து அவர்களை நல்ல குடிமக்களாக மாற்றும் முக்கிய நோக்கத்துடன் சிறைச்சாலை திணைக்களத்தின் பூரண ஈடுபாட்டுடன் கைதிகள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றிய முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப்பினரான கிளிநொச்சியைச் சேர்ந்த 38 வயது கைதி 2 ஏ, 1 எஸ் பெறுபேறுகளைப் பெற்றுள்ளார் என்றும், கேகாலையைச் சேர்ந்த 46 வயதான கைதி 3 எஸ் பெறுபேறுகளைப் பெற்றுள்ளார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கோதுமை மாவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோதுமை மாவின் விலை 350 ரூபா வரை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், மொத்த விற்பனை சந்தையில் 50 கிலோகிராம் கோதுமை மா 17 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

அண்மைக்காலமாகக் கோதுமை மாவின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் பேக்கரி உற்பத்திகள் விலைகளும் அதிகரித்துள்ளன. அவற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பேக்கரிகள் மூடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமையின் கீழ் நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன - என்றார்.

## பாழடைந்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், பொம்மைவெளிப் பகுதியில் போதைப் பொருள் பயன்படுத்தப் படுகின்றது என யாழ் மாவட்ட குற் றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைக் கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந் தனர்.

யாழ் மாவட்ட குற்றத்தடுப்புபிரிவின் போதைத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சாயிமேனன் தலைமையில் சென்ற குழு, இரு பெண்களையும் கைது செய்தனர்.

## வடக்கை வேட்டையாடிய ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

ஏறத்தாழ நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் தற்காலிக ஏற்பாடாக அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவினால் பயங்கரவாதத் தடைசட்டம் கொண்டுவரப்பட்டது. தற்காலிகம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த சட்டம் இன்றுவரை நீடித்திருக்கின்றது. இந்த சட்டமானது எவரையும் தாம் விரும்பியவாறு கைது செய்வதற்கும், நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தாமல், இராணுவ, பொலிஸ் முகாம்களில் அவர்களைத் தடுத்து வைத்து சித்திரவதை செய்து இராணுவம், பொலிஸார் விரும்புகின்ற வகையில் வாக்குமூலம் பெறுவதற்கும் வழிவகுக்கின்றது. மனித உரிமை அமைப்புகளும், சர்வதேச மனித உரிமை நிறுவனங் களும், ஐரோப்பிய ஒன்றியமும் இது ஒரு காட்டுமிராண்டித்தனமான சட்டம் என்றும் இது உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்றும் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றன.

இந்தக் காட்டுமிராண்டிச் சட்டத்தின் கீழ்கடந்தகாலத்தில்ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் யுவதிகள் கைது செய்யப்பட்டு பல சித்திரவதைகளையும் கொடுமைகளையும் அனுபவித்து வந்திருக்கின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் கடந்த காலத்தில் இலங்கை தொடர்பாக கொண்டுவந்த தீர்மானத்திலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியிருந்தது.

ஆனால், அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள், நிர்வாகக் குளறுபடிகள், அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு, எரிபொருள் பற்றாக்குறை போன்றவற்றுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து போராடி ராஜபக்ச குடும்பத்தினரை வீட்டிற்கு அனுப்பினார்கள். அந்த ஜனநாயகபூர்வமான போராட் டத்தை வன்முறை கொண்டு அடக்க முற்பட்டபொழுது, அதற்கெதிராக மக் கள் கொதித்தெழுந்து வன்முறையாளர்களுக்கும் பாடம் புகட்டினர்.

தேசிய பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக வந்து, மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து ராஜினாமா செய்ததால், ஜனாதிபதியால் பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க , மக்கள் எழுச்சியால் விரட்டியடிக்கப்பட்ட கோட்டபாய ராஜபக்ஷவின் இடத்திற்கு இப்பொழுது ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு ஜனாதிபதியாக நியமிக் கப்பட்ட ஒருவர், அறவழிப் போராட்டத் தில் ஈடுபட்ட பலபேரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்கின்ற ஒரு நடவடிக்கையும் நடந்துவரு கின்றது.

மாணவர் அமைப்புகளின் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், பொதுமக்கள் என பலர் இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தி;கீழ் கைதுசெய்யப்படுகிறார்கள். அதற்கான ஒப்புதலையும் உத்தரவுகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியிருக்கின்றார்.தமிழ் மக்களுக்கு எதிராக இந்த காட்டுமிராண்டிச் சட்டம் ஏவிவிடப்பட்டபொழுது, சிங்கள அரசியல் தலைவர்களோ, பொது அமைப்புகளோ, தொழிற்சங்கங்களோ யாருமே அதற்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை. ஆனால் இந்தக் கொடிய சட்டத்தின்கீழ் நாட்டின் ஜனநாயகத்திற்காகவும் ஊழலை எதிர்த்தும் போராடுகின்ற மக்களை கைதுசெய்கின்றபொழுது குறைந்தபட்சம் இந்த சட்டத்திற்கெதிரான குரல் தென்பகுதியில் எழுந்திருப்பது வரவேற்கத்தக்கது.

எம்மைப்பொறுத்தவரையில் அன்றும் சரி இன்றும்சரி இந்தக் காட்டுமிராண்டித்தனமான சட்டம் அகற்றப்பட வேண்டுமென்பதில் தமிழ் மக்களாகிய நாம் உறுதியாக இருக்கின்றோம். ஆனால் இங்கு நகைப்புக்குரிய விடயம் என்னவெனில் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான பேராசிரியர் பீரிஸ், பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகக் கூட்டத்தொடர் தொடங்கவிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத் தைப் பிரயோகிப்பது பிழை என்றும் உலக நாடுகள் அதனை ஏற்றுக்கொள் ளாது என்றும் ஐ.நாமனிதஉரிமைகள்ஆணையகம் இலங்கைக்கு எதிராக காட்டமான தீர்மா னத்தை நிறைவேற்ற அது வழிவகுக்கும் என்றும் ஆகவே பயங்கரவாதத்தடைச்சட்டத்தைஇப்பொழுது பாவிக்கக்கூடாது என்றும் கூறியிருக்கின்றார். அவரைப்பொறுத்தவரையில் சர்வதேச அழுத்தங்களிலிருந்து தற்காலிகமாகவேனும் தப்புவதற்கு ஆலோச னைகளை முன்வைக்கின்றாரே தவிர, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழு மையாக நீக்கும்படி அவர் கூறவில்லை.

ஜனநாயகத்தின்மீதும் மனித உரிமைகள்மீதும் அக்கறை கொண்டவர்களும், அமைதி, சமாதானத்தை விரும்பக்கூடிய எவரும் இத்தகைய காட்டுமிராண்த்தனமான சட்டத்தை ஏற்க மாட்டார்கள். ஜனநாயகப் போராட் டங்களுக்கு எதிராக இந்தச் சட்டம் பாய்கின்ற இத்தருணத்திலாவது சிங்கள அரசியல் தலைவர்களும் சிங்கள மனித உரிமை ஆர்வலர்கள், செயற்பாட்டா ளர்கள், மற் றும் தொழிற்சங்கத்தினரும் இத்தகைய சட்டங்களுக்கு எதிராகக் குரல்கொடுக்க வேண்டும் என்று கோரு கின்றோம். தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் ஊழல் மலிந்த அரசுகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இவ்வாறான சட்டங்கள் என்ன வடிவத்தில் என்ன பெயரில் வந்தாலும் அவை முற்று முழுதாக நிராகரிக்கப்படவேண்டும் என்றும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். - என்றுள்ளது.

## யாழிலும் போராட்டங்கள் ...........




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகமட்ட அமைப்புக்களால் யாழ்ப்பாணத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன்.

யாழ். பஸ் நிலையத்திற்கு அருகாமையிலும், யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா. ஆணையாளர் அலுவலகம் முன்பாகவும் இந்தப் போராட்டங்கள் இன்று செவ்வாய்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டன.

மேலும், இந்தப் போராட்டங்களில் யாழ். பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காணாமல் போன நீதி

**இன்று சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம்.**

**இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இங்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது பல்லாயிரம் உறவுகளுக்காக 13 ஆண்டுகளுக்கு மேல் கண்ணீரும் கம்பலையுமாக அவர்கள் காத்திருக்கும் அவலம் தொடர்ந்து நீடிக்கின்றது.**

**தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து, அதனை நிரந்தர மாக அடிமையாக்கும் நோக்கோடு, அதன் மீது பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்கு அரசுகள் தொடுத்த கொடூர யுத்தமே பல லட்சம் தமிழர்களின் அவல நிலைமைக்குக் காரணம்.**

**பல்லாயிரம் தமிழர்கள் காணாமலாக்கப்பட்டனர். அவர்களுக்கான நீதியும் கூட இந்தத் தீவில் காணாம லாக்கப்பட்டிருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பதுதான் முக்கியம். ஒரே தேவை.**

**அதைத் தேடித் தர வக்கற்ற நிலையில் சர்வதேசம் இந்த பூகோளப் பந்தெங்கும் மனித உரிமைகள் பற்றியும், ஜனநாயகம் குறித்தும், சட்டத்தின் ஆட்சி சம்பந்த மாகவும் தொடர்ந்து போதித்து, உபதேசம் செய்து கொண்டிருக்கின்றது.**

**வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்களுக்கு என்ன நடந்தது, அவர்களைக் காணாமலாக்கியவர்கள் யார் என்பவையெல்லாம் சர்வதேச சமூகத்திற்குத் தெரியும்; அதற்குப் புரியும்.**

**ஆனால் குற்றம் இழைத்த கொடூரத் தரப்புகளுடன் தோளில் கை போட்டுள்ள சர்வதேசங்களும், குற்ற வாளிகளுடன் தார்மீகம் பேசிக்கொண்டு, இராஜதந்திர சிலாகிப்புகளில் ஈடுபட்டுள்ளன.**

**அதனால்தான் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை நியாயமான தீர்வின்றித் தொடர்ந்து இழுபடுகின்றது.**

**நீதி செய்ய வேண்டிய இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பான கொழும்பு தூங்குவது போல நடிக்கின்றது. அதை எழுப்புவது போல சர்வதேசமும் நாடகம் ஆடு கின்றது.**

**நீதிக்காக காத்திருக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் காதுகளில் இந்த இரண்டு தரப்புகளுமே சேர்ந்து பூச்சுற்றுகின்றன. அதைப் பார்த்திருப்பதை தவிர பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு வேறு வழி இல்லை என்பதுதான் இதில் துரதிர்ஷ்ட நிலைமை. காணாம லாக்கப்பட்டோர் விடயத்தில் உண்மைகளைக் கண்ட றிந்து, நீதியையையும் பொறுப்புக்கூறலையும் நிலை நாட்டுவதைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் செய்வதற் குக் கொழும்பும் தயார், சர்வதேசமும் தயார்.**

**நஷ்ட ஈடும் மீளநிகழாமையும் குறித்துத்தான் சர்வதேசம் அதிகம் பேசுகின்றது. நஷ்ட ஈடு அல்லது இழப்பீடு குறித்துத்தான் கொழும்பு அரசும் அடிக்கடி பிரபலாபிக்கின்றது.**

**காணாமல் போனவர்களின் உறவுகளைப் பொறுத் தவரை இவையெல்லாம் இரண்டாம் பட்சமே.**

**அவர்களைப் பொறுத்தவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டறியப்பட வேண்டும். அதுதான் பிரதானம். அதன் மீதுதான் மற்றவை எல்லாம் முன்னெடுக்கப்பட முடியும்.**

**அப்படி சர்வதேச நியமங்களுக்கு அமைய சட்ட நீதி விசாரணைகளை முன்னெடுத்து, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலை நாட்டினால், சிங்களத்தின் கோரமுகம் – பொட்டுக்கேடு – அம்பல மாகிவிடும் என்பதால் அதற்குக் கொழும்பு முரண்டு பிடிக்கிறது. அது தொடர்பில் ஏதும் செய்ய வக்கற்ற தாக சர்வதேசம் மலைத்து நிற்கின்றது. இதுதான் நிலைமை.**

# தற்போதைய பொருளாதார நிலை குறித்து நாளை விளக்கமளிக்க உள்ளார் ஆளுநர்



நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் முன்னோக்கிய வழி எனும் தலைப்பில் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையில் இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை நாடாளுமன்றக் கட்டத்தொகுதியில் இடம்பெறவிருந்த கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணங்களால் இன்று இடம்பெறாது எனவும் அந்த கலந்துரையாடல் நாளை (புதன்கிழமை) பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நாடாளுமன்ற குழு அறை இலக்கம் 1 இல் நடைபெறும் எனவும் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று (திங்கட்கிழமை) நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நிதி விடயங்கள் தொடர்பான எதிர்கால நாடாளுமன்ற விவாதங்களில் நாடாளு மன்ற உறுப்பினர்கள் வினைத்திறனாக பங்குபற்றுவதற்கு பயனுள்ள வகையில் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் முன்னோக்கிய வழி பற்றிய உரையாடலுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் இந்தக் கலந்துரையாடலை இலங்கை மத்தியவங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நடத்தவுள்ளார்.

# போதைப்பொருள் நுகர்ந்துகொண்டிருந்த இரு பெண்கள் யாழ்ப்பாணத்தில் கைது!

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரண்டு பெண்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து இரண்டு கிராம் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பொம்மை வெளி பகுதியில் உள்ள கைவிடப்பட்ட வீடொன்றில் மறைந்தி ருந்து போதைப்பொருளை நுகர்ந்து கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) இரவு பெண்கள் போதைப்பொருளை நுகர்வதாக பொலி ஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்கு போதைப் பொருளை நுகர்ந்து கொண்டிருந்த இரு பெண்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் இருவரும் 28 மற்றும் 29 வயதுடையோர் எனவும் அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன் னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளார்.

## வலிந்து காணமல் ...........







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இராணுவத்திடம் கையளித்து காணாமலாக்கப்பட்ட மற்றும் யுத்த காலப் பகுதிகளில் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு மற்றும் பல்வேறு வகைகளிலும் காணாமலாக்கப்பட்ட தங்களுடைய உறவு களை தேடி வலிந்து காணாமலாக்கப்பட்ட வர்களின் உறவினர்கள் 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பல்வேறு போராட் டங்களை முன்னெடுத்து வருகின்றனர்

இவ்வாறு தங்களுடைய போராட்டங் களுக்கு எந்தத் தரப்புக்களும் உரிய தீர்வுகளை வழங்காத நிலைமையிலே கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் தொடர்ச்சியான கவனவீர்ப்புப் போராட்டங்களை ஆரம்பித்தி ருந்தனர். அவ்வாறு தொடர்ச்சியாக ஆரம்பிக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்ட இன்று 2000 நாள்களைக் கடந்து அது தொடர்கின்றது.

உறவுகளை தேடி அலைந்து இவ்வாறு தொடர் போராட்டங்களில் ஈடுபட்ட சுமார் 140 தாய்,, தந்தையர்கள் உயிரிழந்துள்ள நிலையில் தங்களுக்கான நீதியை வலியுறுத்தி அவர்கள் தொடர்ந்து போராடி வருகின் றனர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்புப் போராட்டமா னது இன்று 2000 நாள்களைக் கடக்கின்ற நிலையில் சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினமாகிய 30 - 08 - 2022 இன்று தங்க ளுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற நீதியான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பாரிய அளவிலான மக்கள் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
செவ்வாய்க்கிழமை 30.08.2022

# அமெரிக்காவில் ஒரே நாளில் நான்கு இடங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பன்னிருவர் பலி!



அமெரிக்காவில் ஒரே நாளில் வெவ்வேறு இடங்களில் நடந்த 4 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 12 பேர் பலியாகினர். இச்சம்பவங்கள் அந்த நாட்டை அதிர வைத்தன.

அமெரிக்காவில் கடந்த சில ஆண்டுகளாகவே துப்பாக்கி வன்முறை சம்பங்கள் பெருமளவு அதிகரித்து வருகின்றன. அங்கு துப்பாக்கி கலாசாரம் ஒரு தொற்றுநோய் போல பரவி வருகிறது. ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான அரசு துப்பாக்கி கலாசாரத்துக்கு எதிரான சட்டப்போராட்டம் தொடரும் என சூளுரைத்து வந்தாலும், துப்பாக்கி பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் செய்வதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது. இதனால் அங்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன. அமெரிக்காவில் இந்த ஆண்டு தொடங்கியதில் இருந்து இதுவரை 350க்கும் அதிகமான மிகப்பெரிய துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் அமெரிக்காவின் வெவ் வேறு இடங்களில் நடந்த 4 துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் அந்த நாட்டை அதிர வைத்துள்ளன.

முதல் துப்பாக்கிச்சூடு சம்பவம் டெக்சாஸ் மாகாணம் ஹூஸ்டன் நகரில் நடந்தது. அதிகாலையில் அங்கு வந்த மர்ம நபர் ஒருவர் முதலில் அங்கிருந்த ஒரு வீட்டுக்கு தீ வைத்தார். பின்னர் அவர் மறைவான இடத்துக்கு சென்று பதுங்கினார்.

இதற்கிடையில் வீட்டினுள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவர்கள் வீட்டில் தீப்பிடித்து எரிவதை உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தனர். பின்னர் அவர்கள் அலறியடித்தபடி வெளியே ஓடி வந்தனர். அப்போது மறைவான இடத்தில் பதுங்கி இருந்த அந்த மர்ம நபர் வீட்டில் இருந்து வெளியே ஓடி வந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டார்.

இதில் 3 பேரின் உடலில் துப்பாக்கி குண்டுகள் துளைத்து இரத்த வெள்ளத்தில் சரிந்து சம்பவ இடத்திலேயே துடிதுடி இறந்தனர். இதனிடையே இந்தத் துப்பாக்கிச் சூடு குறித்த தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை சுட்டுக்கொன்றனர். முதற்கட்ட விசாரணையில் தாக்குதல் நடத்திய அந்த நபர் 40 வயதான ஆப்பிரிக்க வம்சாவளி என்பது தெரியவந்துள்ளது. பொலிஸார் துப்பாக்கிச்சூட்டின் பின்னணி குறித்துத் தாங்கள் தீவிரமாக விசாரித்து வருகின்றனர் எனத் தெரிவித்தனர்.

**ஐந்து வயதுக் குழந்தை சாவு**

இந்தக் கோரச் சம்பவம் நடந்த அடுத்த சில மணி நேரத்தில் டெக்சாஸ் மாகாணத்தின் போர்ட் வொர்த் நகரில் காரில் வந்த மர்ம நபர் ஒருவர் வீட்டுக்கு வெளியே நின்று கொண்டிருந்த சிறுவர்களை துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பி சென்றார்.

இதில் 17 வயது சிறுவனும், 5 வயது குழந்தையும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் ஒரு சிறுவன் படுகாயம் அடைந்தான். துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிசென்ற மர்ம நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

**வெவ்வேறு இடங்களில்...**

இதற்கிடையில் மிச்சிகன் மாகாணத்தில் உள்ள டெட்ராய்ட் நகரில் ஒரே நபர் நகரின் வெவ்வேறு பகுதிகளுக்குச் சென்று கண்ணில் பட்டவர்களையெல்லாம் குருவியைச் சுடுவதைப் போல துப்பாக்கியால் சுட்டுத்தள்ளினார். இதில் 40 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் உள்பட 3 பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் படுகாயம் அடைந்தார். கண்காணிப்பு கமராவில் பதிவான கொலையாளியின் படத்தை வெளியிட்டு அவரைத் தேடிவந்த பொலிஸார் நீண்ட நேர தேடுதல் வேட்டைக்கு பின் அவரை கைது செய்தனர்.

**சுப்பர் மார்க்கெட்டில்...**

இதைதொடர்ந்து நான்காவது துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒரேகான் மாகாணத்தில் உள்ள ஒரு சுப்பர் மார்க்கெட்டில் நடந்தது. பென்ட் நகரில் உள்ள அந்த சுப்பர் மார்க்கெட்டுக்குள் உள்ளூர் நேரப்படி இரவு 7 மணிக்கு மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியுடன் நுழைந்தார். அவர் சுப்பர் மார்க்கெட்டில் பொருள்களை வாங்கி கொண்டிருந்தவர்களை துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார். இதில் 2 பேர் பலியாகினர். அதை தொடர்ந்து அந்த மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இப்படி ஒரே நாளில் 4 இடங்களில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவங்களில் மொத்தம் 12 பேர் உயிரிழந்தனர்.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு இந்தியாவிலிருந்து மரக்கறி வகைகள் ஏற்றுமதி?



லாகூர்,ஓக.30

வெள்ளப் பாதிப்பு காரணமாக பாகிஸ்தானில் காய்கறிகள் விநியோகம் மோசமாக பாதிக்கப் பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தென்மேற்கு பருவமழையையொட்டி கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத வகையில் மழைப்பொழிவு ஏற்பட்டு உள்ளது. இதனால், நாடு முழுவதும் வெள்ளம் சூழ்ந்து உள்ளது. வெள்ளம் அதிகம் பாதித்த 110 மாவட்டங்களில் சுமார் 57 லட்சம் பேர் தங்குமிடம் மற்றும் உணவு இல்லாமல் உள்ளனர். இதன் காரணமாக அங்கு பல்வேறு காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை ஏற்றம் கண்டுள்ளது.

பலுசிஸ்தான், சிந்து மற்றும் தெற்கு பஞ்சாப் ஆகிய பகுதிகளில் காய்கறிகள் விநியோகம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியாவில் இருந்து வெங்காயம், தக்காளி போன்ற காய்கறிகளை பாகிஸ்தான் அரசு இறக்குமதி செய்ய வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி இருந்தது. இந்த நிலையில் இந்தியாவிலிருந்து காய்கறிகள் இறக்குமதி செய்வது குறித்து பாகிஸ்தான் அரசாங்கம் விரைவில் பரிசீலிக்கலாம் என அந்த நாட்டின் நிதி மந்திரி இஸ்மாயில் இன்று தெரிவித்துள்ளார். பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய அவர் கூறுகையில், சமீபத்திய வெள்ளத்தால் நாடு முழுவதும் பயிர்கள் நாசமாகியுள்ளன. இதனால் மக்களுக்கு வசதியாக காய்கறிகள் மற்றும் இதர உண்ணக் கூடிய பொருள்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கலாம் என தெரிவித்துள்ளார். மூன்று ஆண்டுகளுக்குப் முன் காஷ்மீர் பிரச்சினைக்காக இந்தியாவுடனான வர்த்தக உறவுகளைப் பாகிஸ்தான் குறைத்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




## இம்ரான் கானின் உரைகளை நேரலையாக ஒளிபரப்பலாம்

**தடைக்குத் தடை விதித்தது பாக். நீதிமன்று**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் உரையை நேரடியாக ஒளிபரப்ப பாகிஸ்தான் ஊடக அமைப்பு கடந்த வாரம் தடை விதித்து இருந்தது.

இஸ்லாமாபாத்தில் ஒரு பொது நிகழ்ச்சியின் போது பேசிய இம்ரான் கான், இஸ்லாமாபாத் பொலிஸ் அதிகாரி மற்றும் பெண் நீதிவானை அச்சுறுத்தும் வகையில் கருத்து வெளியிட்டார் எனத் தெரிவித்து பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் (பி.டி.ஐ.) தலைவர் இம்ரான் கானின் உரைகளை நேரலையாக ஒளிபரப்ப பாகிஸ்தானின் ஊடக ஒழுங்குமுறை ஆணையம் தடை தித்தது.

இந்த நிலையில் இம்ரான் கானின் உரைகளை நேரடி ஒளி பரப்பு செய்வதற்கு பாகிஸ்தான் ஊடக அமைப்பு விதித்த தடையை பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் இன்று நிறுத்தி வைத்து உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக இம்ரான் கான் தாக்கல் செய்த மனுவை விசாரித்த இஸ்லாமாபாத் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அதர் மினல்லா, பாகிஸ்தான் ஊடக கண்காணிப்பு குழு தனது அதிகாரத்தை மீறியதாக தெரிவித்தார்.

மேலும் அவர்கள் விதித்த தடையை நியாயப்படுத்தும் காரணங்களை முன்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணை செப்டம்பர் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

## ஈராக்கில் அரசியல் குழப்பம்

ஈராக்கில் அரசியல் குழப்பம் நீடிக்கின்றது. அரசியலில் செல்வாக்கு மிக்க தலைவர்களில் ஒருவர் ஷியா தலைவர் முக்தாதா அல்-சதர். முக்தாதா அல்-சதர், தான் அரசியலில் இருந்து விலகுகிறார் என நேற்று அறிவித்தார். அதையடுத்துக் குழப்பம் இன்னும் தீவிரமடைந்தது.

ஈராக் அரசியலில் ஷியா தலைவர் முக்தாதா அல்-சதர் அமெரிக்க-எதிர்ப்பு போராளிகளை வழிநடத்தியவர் லட்சக்கணக்கான ஆதரவாளர்களைக் கொண்ட செல்வாக்குமிக்க தலைவராக திகழ்கிறார்.

கடந்த ஆண்டு ஒக்டோபரில் நடைபெற்ற தேர்தலில் அவரது கட்சி 73 இடங்களை வென்ற நிலையில், யாருக்கும் பெரும்பான்மை இல்லாததால் இழுபறி நீடிக்கிறது. ஈரான் ஆதரவு ஒருங்கிணைப்புடன் ஈராக்கில் பிரதமர் வேட்பாளர்களுடன் அரசாங்கத்தை அமைக்க அல் சதர் எதிர்ப்பு தெரிவித்தார். அல்-சதர் மற்றும் அவரது போட்டியாளர்களுக்கு இடையிலான முட்டுக்கட்டையால் தேர்தல் முடிந்து பல மாதங்கள் கடந்தும்கூட, ஈராக்கில் ஒரு சாதனையாக இன்னும் அரசாங்கம் இல்லாத நிலை உள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைத்தல், முன்கூட்டியே தேர்தல் நடத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபடுமாறு தனது ஆதரவாளர்களை அல்-சதர் வலியுறுத்தினார். இதற்கிடையே, முக்தாதா அல்-சதர், தான் அரசியலில் இருந்து விலகுகிறார் என நேற்று அறிவித்தார். இதனால் அவரது ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், அல்-சதர் ஆதரவாளர்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் 20 பேர் பலியாகினர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. போராட்டக்காரர்களின் வன்முறை மற்றும் ஆயுத பயன்பாடு நிறுத்தப்பட வேண்டும் எனக்கூறி அல் சதர் உண்ணாவிரத போராட்டம் இருந்து வருகிறார். போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த முடியாத சூழலில் அந்த பகுதியில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டு உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உலகின் மருந்தாளராக இந்தியா ஐ.நா. சபைத் தலைவர் புகழாரம்

புதுடெல்லி,ஓக.30



இன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவராக உள்ள மாலத்தீவின் வெளியுறவுத் துறை மந்திரி அப்துல்லா ஷாஹித் இந்தியா வந்துள்ளார். அவர் குறித்து அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

இந்தியாவுக்கு எதிரான வெறுப்புணர்வை சிலர் மாலத்தீவு மக்களுக்கு உருவாக்குகிறார்கள். இது ஒன்றும் இல்லாத ஒரு குழுவினரால் தொடங்கப்பட்ட பிரச்சாரம். அவர்களுக்கு அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சி கொள்கை எதுவும் இல்லை.அவர்களின் கொள்கை வெறுப்பு, இதைத்தான் அவர்கள் மாலத்தீவு மக்களுக்கு உறுதியளிக்கிறார்கள்.

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடு இந்தியா. இந்தியா உலகின் மருந்தாளுனராக திகழ்கிறது. பல நாடுகளை அணுகி உதவுகிறது. அண்டை நாடுகள் மட் டுமின்றி, லத்தீன்அமெரிக்கா, பசிபிக்வரையிலும் இந்தியா சென்றடைந்துள்ளது.

இந்தியா உண்மையாகவே கருணையின் முகத்தை உலகிற்கு காட்டியிருக்கிறது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் சீர் திருத்தம் தொடர்பாக அரசுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தை 14 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இந்த ஒரு வருடத்தில், இந்த செயல்முறையை துரிதப்படுத்த உறுப்பு நாடுகளுக்கு நான் மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளேன். ஏனெனில் உலகின் தற்போதைய புவிசார் அரசியலை பாதுகாப்பு கவுன்ஸில் பிரதிபலிக்க வேண்டும். இல்லவிட்டால் இந்த உறுப்பின் நம் பகத்தன்மை தொடர்ந்து தோல்வியடையும்.

பயங்கரவாதம் ஆபத்தான ஒன்று. அதற்கு மதம் இல்லை. அதை எதிர்த்து ஒன்றிணைந்து உலகம் போராட வேண்டும். - என்றார் அவர்

ஐ.நா.பாதுகாப்பு கவுன்ஸில் நிரந்தர உறுப்பினராக இந்தியாவை சேர்த்து கொள்வது குறித்து தன்னால் உறுதியாக எதையும் சொல்ல முடியாது என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் -

மாலத்தீவு சபாநாயகர் மொஹமட் நஷீத் நேற்று புதுடெல்லியில் இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இலங்கையின் நிதி நெருக்கடி மற்றும் இந்தியப் பெருங்கடல்தீவுநாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து அவர் விவாதித்தார் என்று கூறப்பட்டது.

## உலகப் பணக்காரர்களின் பட்டியலில் 3 ஆவது இடத்தில் கௌதம் அதானி!




புதுடெல்லி,ஓக.30

இந்திய கோடீஸ்வரர் கௌதம் அதானி, பிரான்சின் பெர்னார்ட் அர்னால்ட்டை பின்னுக்குத் தள்ளி உலகின் மூன்றாவது பெரிய பணக்காரர் ஆனார்.

துறைமுகம், விமான நிலையம், எரிசக்தி, தொலை தொடர்பு என பல துறைகளில் கால்பதித்து வருகிறது அதானி குழுமம். இப்படி தொடர்ந்து தொழில் வளர்ச்சியில் ஏற்றம்கண்டு வரும் அதானி, கடந்த பெப்ரவரி மாதம் இந்தியாவின் கோடீஸ்வரர்கள் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வந்த ரிலையன்ஸ் குழுமத்தின் முகேஷ் அம்பானியை முறியடித்தார்.

தொடர்ந்து முன்னேறிய அதானி ஆசிய கோடீஸ்வரர்கள் பட்டியலிலும் முதலிடத்தை பிடித்தார். கடந்த ஜூலை மாதம் உலக கோடீஸ்வரர்களின் பட்டியலில் பில்கேட்ஸை பின்னுக்கு தள்ளி 4 ஆவது இடத்துக்கு முன்னேறினார். 137.4 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன், இந்திய தொழிலதிபர் கௌதம் அதானி, பிரான்சின் பெர்னார்ட் அர்னால்ட்டை முந்தி 3 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டில் ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த ஒருவர் முதல் மூன்று இடங்களுக்குள் நுழைவது இதுவே முதல் முறை. இப்போது தரவரிசையில் அமெரிக்காவின் எலோன் மஸ்க் மற்றும் ஜெப் பெசோஸ் ஆகியோர் முதல் இரண்டு இடங்களில் உள்ளனர்.

91.9 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் ரிலையன்ஸ் குழுமத்தின் தலைவர் முகேஷ் அம்பானி 11 ஆவது இடத்தில் உள்ளார்.

## சிறுபான்மையினரின் மதத் தலங்கள் மீதான தாக்குதல்கள் பற்றி எச்சரிக்கிறது இந்தியா!

### ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் அதன் பிரதிநிதி உரை



நியூயோர்க்,ஓக30

சிறுபான்மை சமூக மதவழிபாட்டு தலங்கள் மீதுநடத்தப்படும்தொடர்தாக்குதல்கள்எச்சரிக்கை மணியை அடித்துள்ளன என ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் பேசிய இந்திய தூதர் கம்போஜ் கூறியுள்ளார். ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்திய தூதர் ருச்சிரா கம்போஜ் பேசும்போது -

ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு மனிதநேய அடிப்படையில் பல்வேறு முறை நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன என கூறியுள்ளார்.

இதன்படி, உயிர் காக்கும் மருந்துகள், காசநோய் ஒழிப்பு மருந்துகள் மற்றும் 5 லட்சம் கொரோனா தடுப்பூசி டோஸ்கள் உள்பட 32 டன்கள் மருத்துவ உதவிகள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. இதுவரை 40 ஆயிரம் மெட்ரிக் டன்கள் கோதுமையும் அந்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது என அவர் கூறியுள்ளார்.

சமீபத்தில் காபூல் நகரில் ஜூன் 18 ஆம் திகதி சீக்கிய குருத்வாரா மீது நடந்த தாக்குதல், தொடர்ந்து அதே குருத்வாரா அருகே நடந்த மற்றொரு குண்டுவெடிப்பு சம்பவம் உள்ளிட்ட சிறுபான்மை சமூக மதவழிபாட்டு தலங்கள் மீது நடத்தப்படும் தொடர் தாக்குதல்கள் எச்சரிக்கை மணியை அடித்துள்ளன்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் பட்டியலிட்டுள்ள, லஷ்கர் இ தய்பா மற்றும் ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாத இயக்கங்களுக்கு இடையேயான பிணைப்புகள் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு வெளியே செயல்பட்டு வரும் பிற பயங்கரவாத இயக்கங்களின் தூண்டி விட கூடிய அறிக்கைகள் ஆகியவை அந்த பகுதியின் அமைதி மற்றும் ஸ்திர தன்மைக்கு நேரடி அச்சுறுத்தலாக உள்ளன. - என்றும் அவர் தெரிவித்து உள்ளார்.

## சத்தீஷ்கரில் நீர்வீழ்ச்சியில் குளிக்கச் சென்ற 6 பேர் பலி

சத்தீஷ்கரில் நீர்வீழ்ச்சியில் குளிக்க சென்றதில் நீரில் மூழ்கி பலியான 6 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன.

சத்தீஷ்கரின் கொரியா மாவட்டத்தில் ராம்தாஹா நீர்வீழ்ச்சி உள்ளது. இயற்கை எழில் சூழ்ந்த இந்த பகுதிக்கு சுற்றுலாவாக வந்த 7 பேர் கொண்ட குழு நீர்வீழ்ச்சியில் குளிக்க முடிவு செய்துள்ளது. இதன்படி, அவர்கள் நீரில் இறங்கி சென்றுள்ளனர். இந்த நிலையில் நீர்வீழ்ச்சியில், நீர் வரத்து அதிகரித்து உள்ளது. அந்த பகுதியில் ஆழமும் அதிகளவில் இருந்துள்ளது. இதனை அறியாமல் குளிக்க சென்ற சுற்றுலாவாசிகள் நீரின் வேகத்தில் சிக்கி அடித்து செல்லப்பட்டு உள்ளனர். காப்பாற்றும்படியும் கூச்சலிட்டு உள்ளனர். எனினும், நீரின் இரைச்சலால் அந்த சப்தம் கேட்கவில்லை. இதன்பின்பு தகவல் அறிந்து மீட்பு குழுவினர் மற்றும் நீச்சல் வீரர்கள் சம்பவ பகுதிக்கு சென்று தேடுதல் பணியில் ஈடுபட்டு உள்ளனர். இதில், நீரில் மூழ்கி உயிரிழந்த 6 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டு உள்ளார் என மாவட்ட மாஜிஸ்திரேட் குல்தீப் சர்மா கூறியுள்ளார்.

சுற்றுலாவுக்கு வந்தவர்கள் அனைவரும் மத்திய பிரதேசத்தின் சிங்ராவ்லி மாவட்ட பகுதியை சேர்ந்தவர்கள் என அவர் கூறியுள்ளார். அவர்களின் உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.






# பெண்கள் தலைமை தாங்குகின்ற குடும்பங்களுக்கு அரிசி வழங்கல்

(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள காயத்ரி கிராமம் மற்றும் விநாயகபுரம் பகுதிகளில் உள்ள பெண்கள் தலைமை தாங்கும் குடும்ப தலைவிகளுக்கு அரிசி விநியோகம் நடைபெற்றது.

பிரபல சமூக செயற்பாட்டாளரும் காரைதீவுப் பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையிலே இந்த விநியோகம் நேற்று முன்தினம் இடம் பெற்றது. கனடாவில் இருந்து நேரடியாக வருகைதந்த சமூக சேவையாளர் மதி அண்ணரின் நிதியுதவியில் அவரை அதனை வழங்கி வைத்தார்.

இதன்போது சமூக செயற்பாட்டாளர்களான வி.ரி. சகாதேவராஜா, கே புண்ணியநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர் . சமகால பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மிகவும் கஷ்டப்படும் விதவை குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அரிசி விநியோகம் வரப்பிரசாதமாக அமைந்தது என்று விநாயகபுரம்சமூக செயற்பாட்டாளர் நந்தபாலு நன்றி தெரிவித்தார்.






## சிறுவர் உரிமைகள், கடமைகள்; சம்மாந்துறையில் செயலமர்வுகள்

(காரைதீவு நிருபர் சகா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் முறை சாராக் கல்வி பிரிவு கடந்த வார இறுதியில் இரண்டு நாள்கள் சிறுவர் உரிமை மற்றும் கடமைகள் தொடர்பான செயலமர்வுகளை நடத்தியது. சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்திலும் நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றன. சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம் . அமீர் வழிகாட்டலில், பிரதிக் கல்வி பணிப்பாளர் அரபாத்தின் ஒருங்கிணைப்பில், சம்மாந்துறை வலய முறைசாரா கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

இதில் ஆசிரிய ஆலோசகர் அஹமட்லெவ்வை மற்றும்70 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## கவிதை நூல் அறிமுக விழா


(பைசல் இஸ்மாயில்)

வி.மைக்கல் கொலினின் 'என் இனிய பட்டாம் பூச்சிக்கு' எனும் கவிதை நூல் அறிமுக விழா திருகோணமலை இலங்கை வங்கிக் கிளையின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து.ரகுராம் தலைமையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் பிரதம அதிதியாகவும், திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன் மற்றும் திருகோணமலை உதவி தொழில் ஆணையாளர் செல்வி நவ ஜீவனா நவரத்னராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களானவும், இலங்கை மத்திய வங்கி திரு கோணமலை பிரதேச முகாமையாளர் க.பிரபாகரன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.






# புல்மோட்டைப் பிரதேசத்தில் கல்வி அபிவிருந்தித் திட்டம்

(ஹஸ்பர்)

முஸ்லிம் எயிட் நிறுவனம் முன்மாதிரி கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக திருகோணமலை கல்வி வலயத்துக்குட்பட்ட புல்மோட்டை 04 ஆம் வட்டார மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை அபிவிருத்தி செய்வதற்கான முதற்கட்ட வேலைத்திட்டமாக தரம் 03, 04 ,05 மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை உத்தியோகபூர்வமாக நடத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை நடை பெற்றது.

இந் நிகழ்வில் முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் ஏ.சி. பைசர் கான் மற்றும் திட்ட முகாமையாளர் பஸ்லான் தாசீம் , திருகோணமலை மாவட்ட இணைப்பளர் சலீம் , திட்ட அதிகாரி முகம்மட் அஸ்வர், பாடசலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், பொற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# தொடர்கதையாகக் கண்ணீருடன் அலையும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள்!

(சண்முகலிங்கம் தவசீலன்)

நாட்டில் இடம்பெற்ற கொடூர யுத்தம் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் பல்வேறு துன்பங்களை விட்டுச் சென்றிருக்கிறது. அந்த வகையில் சில தரப்பினர் தங்களுடைய துன்பங்களை படிப்படியாக குறைத்துக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை முன்கொண்டு செல்கின்ற அதே வேளையிலே இன்னொரு பகுதியினர் தங்களுடைய வாழ்வை நாளும் பொழுதும் தொலைத்தவர்களாக நடைபிணங்களாகி வருகின்ற சோகப்கதை தொடர்ந்தே வருகின்றது

முல்லைதீவு மாவட்டம் பன்னெடுங்கால யுத்தத்தால் பல்வேறு இன்னல்களை சந்தித்தது மாத்திரமன்றி ஆழிப்பேரலை அனர்த்தத்தாலும் பல்வேறு வகைகளிலும் தொடர்ச்சியாக பேரழிவுகளை சந்தித்தது அங்கு வாழ்கின்ற மக்கள் பல்வேறு சொல்லொனா துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்ற நிலையிலே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நாளும் பொழுதும் அவர்களுடையவாழ்வைஉருக்கிஉருக்கிநடைப்பிணங்களாக வருகின்ற நிலைமை தொடர்ந்து வருகின்றது.

அந்த வகையிலே நாட்டில் இடம் பெற்ற கொடூர யுத்த காலப்பகுதியிலும் அதன் பின்னரான காலப்பகுதியிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என்ற போர்வைக்குள் 2009 ஆம் ஆண்டுயுத்தம்நிறைவடைந்தபின்னர்இராணுவத்திடம் கையளித்தவர்கள் யுத்த காலப்பகுதிக்குள் தங்களுடைய உறவுகளை வெள்ளை வான்களில் கடத்திச் சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கடலிலே தொழிலுக்குச் சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இவ்வாறு பல்வேறு வகையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களினுடைய பல்லாயிரக்கணக்கான உறவுகள் இன்றும் வடக்கு, கிழக்கில் தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது அவர்கள் எங்கே எப்போது வருவார்கள் அவர்களுக்கு என்ன நீதி என்று தெரியாமல் தொடர்ச்சியாகத் தங்களுடைய உறவுகளைக் கோரி போராடி வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியிலே வடக்கு கிழக்கு உட்பட்ட 8 மாவட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் தங்களுடைய உறவுகளைத் தேடி தொடர்ச்சியாக 13 ஆண்டுகளுக்கு மேலாக இன்றுவரை அவர்களுக்கு எந்த விதமான நீதிகளும் கிடைக்கப் பெறாது போராடி வருகின்றனர்.

இவர்களது போராட்டங்கள் எவையும் எந்தவிதமான தீர்வுகளையும் கொண்டு வராத நிலைமையிலே கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் இந்த வடக்கு, கிழக்கினுடைய 8 மாவட்டங்களிலும் தொடர் கவனவீர்ப்பு போராட்டங்கள் மாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் கூடாரங்கள் அமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான பின்னணியிலே முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்பு போராட்டம் இன்று 2000 நாளை கடக்கிறது. இவ்வாறான நிலையிலே இன்றைய நாள் சர்வதேச வழிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களினுடைய தினமாக காணப்படுகின்ற நிலைமையிலே இந்த நாளிலே உறவுகள் புதுக்குடியிருப்பு நகரில் பாரிய ஒரு கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தி தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற நீதியான விசாரணை சர்வதேச விசாரணை ஊடாக இடம்பெற வேண்டும் என்றும் குற்றம் இழைத்தவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோரி பாரிய போராட்டம் ஒன்றையும் முன்னெடுக்கின்றனர்

இவ்வாறு தொடர் போராட்டங்களை முன்னெடுத்து தங்களுடைய பிள்ளைகளைத் தேடிய சுமார் 140 இற்கு மேற்பட்ட தாய், தந்தையர்கள் இன்று வரை தங்களுடைய பிள்ளைகளுக்கான நீதி கிடைக்கப் பெறாமலே தங்களுடைய வாழ்வை முடித்துக் கொண்டுள் ளனர். இன்று அவர்களுடைய அந்த பிள்ளைகளைத் தேடுவதற்கு வேறு யாரும் அற்ற நிலை கூடக் காணப்படுகின்றது. இவ் வாறு தாங்கள் இறப்பதற்கு முன்னாவது தங்களுடைய பிள்ளைகளைக் காண வேண் டும் என்ற ஏக்கத்தோடு வாழ்பவர்கள் ஆயிரம் பேர்.



இவ்வாறானவர்களில் வாழ்கின்ற ஒருவரே முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வள்ளிபுனம் என்னும் கிராமத்தில் வாசித்து வருகின்ற தங்கவேல் சத்தியதேவி ஆவார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் நிறைவடைந்த மே மாதம் 18 ஆம் திகதி இலங்கை இராணுவத்திடம் தன்னுடைய மகள் சிவாயினி தன்னுடைய மருமகன் மகாலிங்கம் சின்னத்தம்பி தன்னுடைய மூன்று பேரப்பிள்ளைகளான மகிழினி, தமிழொளி, எழிலினி என ஐவரையும் இராணுவத்திடம் ஒப்படைத்துவிட்டு வருகை தந்திருக்கின்றார்.

இவ்வாறு இராணுவத்திடம் ஒப்படைத்த தன்னுடைய ஐந்து உறவுகளும் காணாமல் ஆக்கப்பட்டதை தொடர்ந்து தொடர்ச்சியாக 2009 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பல்வேறு ஆணைக் குழுக்கள், மனித உரிமை ஆணைக்குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இன்னும் எங்கு எங்கு எல்லாம் அவர்களைத் தேட முடியுமோ அங்கு எல்லாம் தேடி இன்றுவரை தன்னுடைய ஐந்து உறவுகளுக்கும் என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் தன்னுடைய முதுமை காலத்திலே அவர்களைத் தேடிய அலைந்து பல்வேறு விதமாக நோய்வாய்ப்பட்டு தான் இறப்பதற்கு முன் தன்னுடைய பேரப்பிள்ளைகளுடன் வாழ வேண்டும் என்ற அவாவோடு வாழ்ந்து வருகிறார்.

இந்த தாயார் தான் தன்னுடைய 5 உறவுகளையும் இராணுவத்திடம் ஒப்படைத்து விட்டு வந்தார் எனவும் இவர்களுடனேயே தான் வாழ்ந்து வந்தார் எனவும் தான் தற்போது நோய் வாய்ப்பட்டு போராட்டங்களுக்கு கூட செல்ல முடியாத அளவுக்கு நிலைமை ஏற் பட்டுள்ளதாகவும் தனிமையில் தற்போது வாழ்ந்து வருகிறார் எனவும் எனது ஐந்து உறவுகளையும் என்னுடன் வாழக்கூடிய வகையில் என்னிடம் தருமாறும் தான் நோய்வாய்ப்பட்டு தனக்கு யாரும் அற்ற நிலையில் தனிமையில் வாழ்ந்து வருகிறார் எனவும் தான் இறப்பதற்கு முன் அவர்களோடு வாழ்வதற்கு தன்னுடைய உறவுகளைத் தன்னிடம் மீட்டுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றார்.

இவர் போன்று பல்லாயிரக்கணக்கான உறவுகள் தன்னுடைய பிள்ளைக்கு என்ன நடந்தது என்று தெரியாமலும் தன்னுடைய கணவனுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலும் பல்வேறு குழந்தைகள் தன்னுடைய அப்பா எப்போது வருவார் என்கின்ற ஏக்கத்தோடும் இவ்வாறாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினுடைய சோகக் கதைகள் தொடர்ந்து வருகின்றன.

நாளாந்தம் தங்களுடைய உறவுகளைத் தேடி தேடி வீதிகளிலே அலைந்து அழுது புலம்பி நோய் வாய் பட்டவர்களாக மாறி இறந்து போகின்ற நிலைமைகளே தொடர்ச்சியாக நீடிக்கின்றன. இவ்வாறானவர்களுக்கான சரியான ஒரு நீதியான விசாரணை சர்வதேச விசாரணை ஊடாக இடம்பெற வேண்டும் என்பதே இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களினுடைய உறவினர்களுடைய கோரிக்கையாகக் காணப்படுகின்றது.

எனவே இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களினுடைய வேதனை வாழ்க்கையில் வெகு விரைவிலே அவர்களுக்கான தீர்வுகள் வழங்கப்படாத பட்சத்தில் இன்னும் பலர் நோய் வாய்ப்பட்டவர்கள் ஆக மாறி உயிர் இழக்கின்ற சோக வரலாறு மண்ணில் நீடிக்க இருக்கின்றது. ஆகவே அனைத்து தரப்பினரும் இணைந்து இவர்களுக்கான ஒரு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

# தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு பெறாமல் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இடித்துரைப்பு

(பாறுக் ஷிஹான்)

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வை பெற முடியாமல் தற்போதைய பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வுகளை பெற முடியாது. தற்போதைய ஜனாதிபதியிடம் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள கட்சிகள் ஒன்றிணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

அது தவிர, கல்முனை பிரச்சினை தொடர் பாக 29 வருடங்களாக இளைஞர்கள் முதல் பெரியவர்களை வரை போராடுகிறீர்கள். இதனைத் தரமுயர்த்துவதா இல்லையா என்பதை முதலில் வினவுங்கள் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தியாகிகளை நினைவு கூருவோம். அவர் தம் உறவுகளை கௌரவிப்போம் ஈழ விடுதலை போராட்ட வரலாற்றில் உயிர் நீத்த தியாகிகளை நினைவு கூறும் வைபவமும் அவர் தம் உறவுகளை கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை மாலை கல்முனை உவெஸ்லி தேசிய பாடசாலைக்கு அருகிலுள்ள கிருஸ்டா இல்ல மண்டபத்தில் இடம்பெற்றது.

வு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) அம்பாறை பிராந்திய கல்முனை வலயத்தின் சிறப்பாக இடம்பெற்றது.

இதன் போது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ந.சிவசக்தி ஆனந்தன், ரெலோ முக்கியஸ்தரும் கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான ஹென்றி மகேந்திரன் உட்பட பல பிரமுகர்கள் அதிதிகளாகக் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்ம 1991 ஜுன் 19ஆம் திகதி சென்னையில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் கே.பத்மநாபா உட்பட முன்னணி பேராளிகள் படுகொலை செய்யப்பட்ட மற்றும் படுகொலையான கட்சியின் போராளிகளின் நினைவாவாக மேற்படி நிகழ்வு இடம்பெற்றதுடன் பத்மநாபாவின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தபட்டதுடன் ஏனையோரின் நினைவு உரைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் புலம்பெயர் வாழ் கட்சி உறுப்பினர்களும் உயிர் நீத்தவர்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வைப் பெற முடியாமல் தற்போதைய பொருளாதார பிரச்சினைக்கு தீர்வுகளை பெற முடியாது .தற்போதைய ஜனாதிபதியிடம் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் ஒன்றிணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.அது தவிர கல்முனை பிரச்சினை தொடர்பாக 29 வருடங்களாக இளைஞர்கள் முதல் பெரியவர்களை வரை போராடுகிறீர்கள்.

இதனை தரமுயர்த்துவதா இல்லையா என்பதை முதலில் வினவுங்கள். ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடிவுக்காக உயிர்த் தியாகம் செய்த அத்தனை தமிழ் உறவுகளும் தியாகிகளேயாவர். யுத்தத்தால் உயிரிழந்த அனைவருமே தியாகிகளாவர். இவர்கள் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடிவுக்காகவே உயிர் நீத்தார்கள். இதில் பல தமிழ்க்கட்சிகளில் இருந்தும் உயிரிழந்துள்ளார்கள்.

இதில் கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் ஈ.பி.ஆர். எல்.எவ். எனப்படும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்து பலர் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உயிரிழந்துள்ளனர். மனைவி கணவனையும், தாய் தந்தை தனது பிள்ளையையும் சகோதரி சகோதரனையும் இழந்துள்ளார்கள். குடும்பத்திலிருந்து ஆறு உறவினர்கள் மற்றும் ஐந்து



உறவினர்கள் நான்கு உறவினர்கள் என பலரும் தமது உறவுகளை இழந்துள்ளனர். இந்த உயிரிழப்பு தமிழர்களின் விடிவுக்காகச் செய்த மிகப்பெரிய தியாகமேயாகும்.

இவர்கள் உட்பட வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் விடிவுக்காக உயிர் துறந்து அனைவருமே தியாகிகளாவர். அந்தத் தியாகிகளை நாம் நினைவு கூருகின்றமை நமது கடமையாகும். நமது சமூகத்தின் விடுதலையை நோக்கி சர்வதேசம் சென்று கொண்டிருக்கின்றது.

இந்த விடுதலை வலுப்பெறுமே தவிர நலிவடைந்து விடாது. இதற்குத் தமிழ்த் தியாகிகள் செய்த தியாகம் தமிழ் உயிர்களைப் பலி கொடுத்த உறவுகள் செய்த தியாகமுமே இன்று சர்வதேச முன்னெடுப்புக்களுக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது - எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தியாகிகள் குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

---

### வீடு கட்டும் கனவை சிதைக்காதீர்!

# சுண்ணாம்புக்கல் விலையேற்றத்தை கைவிடுமாறு வற்புறுத்துகிறார் சுரேஷ்

மத்தியதர வகுப்பினர் சொந்த வீடு கட்டும் கனவை சிதைக்கும் வகையில் கனிமவள கூட்டுத்தாபனத்தின் சுண்ணாம்புக்கல்லுக்கான விலை காணப்படுவதால் விலையேற் றத்தைக் கைவிடுமாறு கோரு கின்றோம். தேவையெனில், தொழிற்சாலை நடவடிக்கைக ளுக்காக பாவிக்கின்ற சுண் ணாம்புக்கல்லுக்கு உரிமைத் தொகையை அதிகரிக்கவும்.

இவ்வாறு ஈழ மக்கள் புரட் சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ்பிரமேசந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

அரச நிறுவனமான கனிமவள கூட்டத்தாபனத்தினால் கடந்த காலத்தில் ஒரு கியூப் கருங்கல்லுக்கு 240 ரூபாவும், ஒரு கியூப் சுண்ணாம்புக்கல்லுக்கு 140 ரூபாவும், ஒரு கியூப் மணலுக்கு 900 ரூபாவும் உரிமைக் கட்டணமாக (Royalty) வசூலிக்கப்பட்டு வந்தது. ஆனால், கருங்கல், மணல் ஆகியவற் றின் உரிமைத்தொகை அப்படியே இருக்க, யாழ் மாவட்டத்தில் இருந்து அகழப்படும் சுண்ணாம்புக்கல்லுக்கான உரிமைத் தொகையானது ஒரு கியூப்பிற்கு 140 ரூபாவிலிருந்து 946 ரூபா வாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

இந்த விலையேற்றத்திற்கான காரணத்தை கனிமவள கூட்டத்தாபனத்தினர் தெளிவுபடுத்துகையில், சீமெந்து போன்ற உற்பத்தித் தொழிற்சாலைக்குப் பயன்படுவதாகவும்,

ஆகவேதான் அதன் உரிமைத்தொகை அதிகரிக்கப் பட்டுள்ளது எனவும் குறிப்பிடுகின்றனர். எனினும், இது ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணமாக இல்லை.

யாழ் குடாநாட்டின் கட்டுமானப் பணி களுக்கு மிகப்பெரும் அளவில் சுண் ணாம்புக்கல்லே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதுமட்டுமன்றி, யாழ் குடாநாட்டில் சுண்ணாம்புக்கல்லை அடிப்படையாகக் கொண்ட எந்தத் தொழிற்சாலையும் இயங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான ஒரு சூழ்நிலையில், சுண்ணாம்புக் கல்லின் உரிமைத் தொகையை பல மடங்கு அதிகரிப்பது என்பது யாழ்ப்பா ணக் குடாநாட்டின் கட்டுமானப் பணி களை பாரதூரமாகப் பாதிக்கும் என்ப துடன், வெளியில் இருந்து கொண்டுவரப் படக்கூடிய கருங்கல்லின் விலையும் அதிகரிக்கும்.

ஏற்கனவே நாடு மிகப் பாரிய பொரு ளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக் கின்ற சமயத்தில் கட்டுமானப் பொருட்கள் அனைத்திற்கும் தட்டுப்பாடு நிலவுவதுடன், விலை அதிகரிப்பும் நிலவும் சூழலில், எமது மண்ணில் கிடைக்கக் கூடியசுண்ணாம்புக்கல்லுக்கானவிலையேற்றம் என்பது மக்களை இன்னமும் பலமடங்கு பாதிக்கும் ஒரு செயற்பாடாகும்.

ஒரு சொந்த வீட்டை அமைத்துக்கொள்வதென்பது மத்தியதர வர்க்கத்தின் வாழ்நாள் கனவாகும். அந்தக் கனவைக் குழிதோண்டிப் புதைக்கும் வகையில் கனிமவள கூட்டத்தாபனத்தின் செயற்பாடு அமைந்து விடக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

குடாநாட்டிற்கு வெளியில் தொழிற் சாலைகளுக்காக சுண்ணாம்புக்கல் கொண்டுசெல்லப்படுமாக இருந்தால், அதற்கான உரிமைத் தொகையை நீங்கள் அதிகரிக்கலாம். ஆனால், குடாநாட்டிற்குள் நடக்கக்கூடிய கட்டுமா னப் பணிகளுக்காகப் பெற்றுக்கொள்ளும் சுண் ணாம்புக்கற்களுக்கு அவ்வாறான உரிமைத் தொகையை அறவிடுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாகும்.

எனவே, கனிமவள கூட்டத்தாபனத்தினர் மேற்கண்ட பிரச்சினைகளை கவ னத்தில் எடுத்து, பழைய முறையிலேயே அதே விலையிலேயே குடாநாட்டு மக் கள் சுண்ணாம்புக்கல்லைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறோம். - என்றுள்ளது.

---

# வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இருவர் கைது!

### யாழில் சம்பவம்

கிளிநொச்சி, இரத்தினபுரம் பகுதியில் தங்க சங்கிலி அறுப்பில் ஈடுபட்ட இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, இரத்தினபுரம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீதியில் சென்ற பெண்ணின் தங்க சங்கிலியை மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அறுத்து சென்றனர்.

இந்நிலையில் நேற்று (திங்கட்கிழமை) யாழ். நகர் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் நகை ஒன்றை விற்பனை செய்ய முற்பட்ட இருவர் தொடர்பாக நகைக் கடை உரிமையாளர்கள் சந்தேகமடைந்து, அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

அதனை அடுத்து இருவரையும் கைது செய்த பொலிஸார், அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, இருவரும் கிளிநொச்சியில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டவர்கள் எனவும், அவ்வாறு வழிப்பறி கொள்ளையடிக்கப்பட்ட ஒன்றரை பவுண் சங்கிலியையே விற்க முற்பட்டனர் எனவும் தெரியவந்துள்ளது.

மேலும், அவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகையையும் பொலிஸார் மீட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# மேலும் இரு நாடுகள் பயணத்தடையை நீக்கின!

இலங்கைக்கான பயண ஆலோசனைகளை தளர்த்திய நாடுகளின் பட்டியலில் ஸ்வீடன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளும் இணைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை எதிர்பார்த்ததை விட சிறந்த மீட்சிக்கான அறிகுறிகளைக் காணும் வாய்ப்புகளை மேலும் அதிகரிக்க இரு நாடுகளும் நேற்று (திங்கட்கிழமை) இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தன.

இதவேளை கடந்த ஓகஸ்ட் 26 ஆம் திகதி பிரித்தானிய அரசாங்கம், இலங்கைக்கான பயண ஆலோசனையைத் தளர்த்தியதோடு அத்தியாவசிய பயணங்களைத் தவிர ஏனைய பயணங்களுக்கு எதிராக இனி அறிவுறுத்தல்களை விடுப்பதில்லை என்றும் அந்த அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது.

மேலும் நோர்வே, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளும் முன்னதாக இலங்கைக்கான பயண அறிவுறுத்தல்களைத் தளர்த்தியமை குறிப்பிடதக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.08.2022இல் வெளியிடப்பெற்றது.